3. கவன ஈர்ப்பு.

அம்பாசமுத்திரம் பகுதியிலிருந்து வெளியே நெல் கொண்டு செல்ல முடியாத நிலை குறித்து.

திரு. ச. சங்குமுத்து தேவர்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையில் 41-வது விதியின் கீழ், அம்பாசமுத்திரம் தாலுக்கா முழுவதும் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதியாக இருந்து வருவதால் இப் பகுதியில் உற்பத்தி ஆகும் நெல்லை வெளித் தாலுக்காக்களுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை இருந்து வருவதும், இதனால் ஏனைய சுற்றியுள்ள பகுதிகளில் அரிசி கூடுதல் விலைக்கு விற்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாநில எல்லை நெடுக, ஐந்து மைல் சுற்றளவுக்குள் உள்ள எல்லையோரப் பகுதியில் அரிசி எடுத்துச் செல்வதன் மீது முனைப்பாக சோதனை மேற்கொள்ளப்படுகிறது. மாநில எல்லைப் பகுதியில் கள்ளக் கடத்தலைத் தடுக்க சாதாரணமாக எடுக்கப்படும் நடவடிக்கை இதுதான். கேரள எல்லையில் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் அத்தகைய நடவடிக்கை எதுவும் முழு அளவில் பலனளிக்கவில்லை. எனவே, இம்மாநிலத்திற்கும் கேரளாவிற்கும் இடையிலுள்ள எல்லை நெடுகவும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் உள்ள எல்லையோரப் பகுதிகளை அடுத்துள்ள சில பகுதிகளில் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு அரிசி, நெல் (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையின் விதித்துறைகளைச் செயற்படுத்துவது அவசியமென்பதை அரசு உணர்ந்தது. இப்பகுதிகளில் தானிய நடமாட்டங்களைக் கண்காணித்து, கேரளாவிற்குக் கடத்திச் செல்ல ஊக்கமளிக்கும் வகையில் பெருமளவில் தானியங்களை இருப்பு வைப்பதைத் தடுப்பதே இந்நடவடிக்கையின் குறிக்கோளாகும். இதன் பொருட்டே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை வட்டங்கள், 8—3—1973 முதற்கொண்டு தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையின் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளாகக் கொண்டுவரப்பட்டன.

1974 மார்ச் 8] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

திருநெல்வேலி மாவட்டத்தில், அறிவிக்கப்பட்ட பகுதிகளான அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் அரிசி உபரியாகக் கிடைக்கிறது. குறிப்பாக, அம்பாசமுத்திரம் வட்டத்தில் நெல் கணிசமான அளவிற்கு உபரியாக விளைகிறது. எனவே உபரியாகக் கிடைக்கும் தானியம் கேரளாவிற்குச் செல் லாமல் தடுத்து, அவ்வாறு உபரியாகக் கிடைக்கும் தானியத்தின் பெரும் பகுதி, மாவட்டத்திற்குள்ளே (பற்றுக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்குக் கிடைக்கும் நிலைமை ஏற்படும் வகையில் பரவலான ஒழுங்கு முறை நடவடிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு சிறு பகுதி மாநில தொகுப்பு ஏற்பாட்டிற்காக ஒதுக்கப் படுகிறது. அறிவிக்கப்பட்ட இப்பகுதியில் 25 சதவிகித லெவி செயலில் இருந்து வருகிறது. ஆகவேதான், கீழ்க்கண்ட காரணங் களுக்காக போக்குவரத்துக் கட்டுப்பாடு வரையறைகள் விதிக்கப் பட்டுள்ளன:—

(1) அறிவிக்கப்பட்ட பகுதியில் லெவி வசூலிப்பதைச் செயலுக்குக் கொண்டு வருதல்;

(2) போக்குவரத்து அனுமதிகள் முறையின் கீழ், மாவட்டத் திற்குள் அறிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து பற்றுக்குறைப் பகுதி களுக்கு தானியங்களைக் கொண்டு செல்வதை முறைப்படுத்தல், லெவி கொள்முதல் திட்டத்தைச் செயற் படுத்துவதற்கு மட்டு மின்றி மாவட்டத்தின் அறிவிக்கப்பட்ட பகுதியிலும் எஞ்சிய பகுதியிலும் உணவு தானியங்கள் சீரான அளவில் கிடைக்குமாறு செய்வதற்கும் இக்கட்டுப்பாடுகள் அவசியமாகின்றன. அம்பா சமுத்திரம் வட்டத்தில் 1973-ல் உற்பத்தியான அளவு ஏறத்தாழ 68,000 டன் ஆகும். வட்டத்துக்குத் தேவைப்படுவது 54,000 டன் தான். இதன் மூலம் உபரியாகக் கிடைத்தது ஏறத்தாழ 14,000 டன் ஆகும். 1973-ல் அம்பாசமுத்திரம் வட்டத்திலிருந்து சுமார் 10,400 டன் அரிசி மாவட்டத்தின் பற்றுக்குறைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. 1973-ல் 25—5—1973 வரை, வணிகர்கள் 20 சதவிகிதம் லெவி கொடுக்க வேண்டி இருந்தது. 26—5—1973 முதல் நாளது வரையில் அவர்கள் 25 சதவீதம் லெவி கொடுக்க வேண்டியுள்ளது. அம்பாசமுத்திரம் வட்டத்தில் 1973-ல் மட்டும் லெவி மூலம் கிடைத்த அரிசி 1653 டன்னாகும். இவ்விரண்டின் மொத்த அளவு 12,000 டன் அரிசி ஆகும். அம்பா சமுத்திரம் வட்டத்தின் உபரி நெல் முழுவதும் லெவி வசூல் முறை

மூலமும் மாவட்டத்தின் ஏனைய பற்றுக்குறைப் பகுதிகளுக்குப் போக்குவரத்து செய்யப்படும் தானியங்களின் மூலமும் ஈடு செய்யப்பட்டிருப்பதை இதிலிருந்து அறியலாம். அம்பாசமுத்திரத்திலிருந்து மாவட்டத்தின் பற்றுக்குறைப் பகுதிகளுக்கு கட்டுப்பாடு இல்லாமல் தேவைக்கேற்ப நெல் அனுமதி வழங்கப் படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலும் அதனைச் சுற்றியுள்ள சில மையங்களிலும் தற்சமயம் உள்ள அரிசி மொத்த விலைகள் 2—3—1974-ல் உள்ள விலை அம்பாசமுத்திரம் ரூ. 129. திருநெல்வேலி ரூ. 119, நான்குனேரி ரூ. 125. ஸ்ரீவைகுண்டம் ரூ. 130, கோவில்பட்டி ரூ. 130, தூத்துக்குடி ரூ. 130 நெல் கொள்முதல் விலை கணிசமான அளவு உயர்ந்துள்ளதன் காரணமாகவும் இன்றியமையாத பொருள்களின் விலைகள் கூடியுள்ளதன் காரணமாகவும் மேற்கண்ட மையங்கள் சிலவற்றில் இவ்வாண்டு அரிசி விலை சற்று உயர்ந்திருப்பது உண்மையே. ஆயினும், அம்பாசமுத்திரத்திலும் அதனைச் சுற்றியுள்ள மையங்களிலும் உள்ள அரிசி விலைகள் ஏறத்தாழ சமமாக இருப்பதைக் காணலாம். இதனால் அம்பாசமுத்திரத்தில் கிடைக்கும் உபரி அரிசி, பற்றுக்குறைப் பகுதிகளில் தேவை ஆகியவற்றையொட்டி மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது என்றும் இம்மாவட்டத்தில் எந்த மையத்திலும் அரிசியின் விலை குறிப்பிடத்தக்க அளவு உயரவில்லை என்றும் தெரிய வருகிறது. இப்பொழுது அம்பாசமுத்திரம், திருநெல்வேலி முதலிய மையங்களில் அறுவடை தொடங்கி இருப்பதால் நெல், அரிசி விலைகள் குறையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது கள்ளக் கடத்தல் காரணமாகத்தான் இந்த மாதிரி அறிவிக்கப்பட்ட பகுதியாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் உரம் மற்றும் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய மற்ற பொருட்கள் வழங்குவதில் இந்தப் பகுதிக்கு பிரத்தியேக சலுகை எதுவும் கொடுக்கப்படவில்லை. அப்படி இருக்கும்போது இந்தப் பகுதியை மட்டும் ஏன் அறிவிக்கப்பட்ட பகுதி என்று வைக்க வேண்டும்? சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் மற்ற தாலுகாக்களைவிட இங்கே 20 ரூபாய் குறைந்த

1974 மார்ச் 8] [திரு. ச. சங்குமுத்து தேவர்]

விலைக்கு நெல் விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பெல்ட் ஏரியாவாக இருந்தால் இந்த மாதிரி தடை விதிப்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. தடை விதிப்பது என்றால் திருநெல்வேலி மாவட்டம் முழுவதற்கும் ஒரே சீராக விதிக்க வேண்டும். இப்படி ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் தடை விதிக்கக் கூடாது. கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது என்றால் அதைக் கணிகாணிப்பதற்கு செக் போஸ்ட் இருக்கிறது. அதை விட்டுவிட்டு யாரோ ஒரு சிலர் செய்த தவறுகளுக்காக அந்தத் தண்டனையை விவசாயிகள் அடைய வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சாகுபடி செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல் கஷ்டப்படச் செய்வது நியாயமல்ல. இதற்குப் பரிகாரம் காணும் வகையில் ஏதாவது ஒரு ஏற்பாட்டை ஒரு மாற்று வழியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைந்த விலை என்று சொல்வது வெளி மார்க்கெட்டில் உள்ள நிலைமை என்று கருதுகிறேன். சர்க்கார் நிர்ணயம் செய்த விலையில் எவ்வளவு நெல் இருந்தாலும் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். சர்க்கார் 70 ரூபாய்க்குக் குறையாமல் கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறது. அறிவிக்கப்பட்ட பகுதியாக வைத்துக் கண்காணித்தால்தான் ஓரளவு நாம் கள்ளக் கடத்தலைக் கட்டுப்படுத்த முடிகிறது என்ற காரணத்தால் இப்படிச் செய்திருக்கிறோம். சென்ற ஆண்டும் இதே முறையைத்தான் கையாண்டோம். இந்த ஆண்டு இந்த முறையைக் கையாளுகிறோம். இதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, அம்பாசமுத்திரம் தாலுகா முழுவதும் அறிவிக்கப்பட்ட பகுதியாக இருப்பதால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை வெளியிடங்களுக்குக் கொண்டுசென்று விற்பனை செய்ய முடியாமல் இருக்கிறது. வெளியிடங்களிலுள்ள வியாபாரிகளும் இங்கே வந்து கொள்முதல் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. மலைக்கு அந்தப் பக்கம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால் செக் போஸ்ட்டை வைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால்

விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை உரிய விலைக்கு விற்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுவார்கள். அதற்கு ஏதாவது மாற்று வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்கள் நெல்லை நிச்சயமாக விற்காமலேயே போய்விட முடியாது. இந்தக் கட்டுப்பாடு இல்லை என்றால் பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் கடத்தல் நடைபெறும். அங்கிருந்து கிட்டத்தட்ட 10,000 டன் நெல்லை ஏற்கெனவே கடத்திச் சென்றிருக்கிறார்கள். இந்த மாதிரி கடத்தல் நடைபெறாமல் இருப்பதற்காகத்தான் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம். கட்டுப்பாடு இருந்தால் யார் யார் கடத்து கிறார்கள் என்பதைக் கண்காணிக்க முடியும். ஆகவே, நெல் விற்பனை செய்ய இந்தத் தடை பாதகமாக இருக்காது; கடத்தல் காரர்களுக்குத்தான் பாதகமாக இருக்கும். அந்தப் பகுதியில் எங்காவது நெல் தேக்கம் இருந்தால், அங்கத்தினர் அவர்கள் அதுபற்றித் தெரிவித்தால் நாளையே கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறோம்.

4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் விதி 6, உள்விதி (1) இன் படி, கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமனம் செய்திருக்கிறேன்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்
6. திரு. கோ. இளங்கோவன்.

திரு. கோவை செழியன்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் 42-வது விதியின்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அது பற்றிய விவரங்கள் அறிந்து கொள்ளலாம் என்றுதான். . .